**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்**

அ.வ.எண் – 7/2020 நாள்– 05.03.2024

சாட்சி – வா.சா.1

பெயர் – ராமாயி

1969 ம் ஆண்டு 10–வது சட்டத்தின் விதிகளின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு பிரமாணம் செய்யப்பட்டது.

**2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

1) எனது பிரமாண வாக்குமூலத்தில் 1–ம் பிரதிவாதியானவர் தாவா சொத்தின் அருகில் இருக்கும் நில உரிமையாளர் என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் மேலும் பிரமாண வாக்குமூலத்தில் 1–ம் பிரதிவாதியானவர் கடந்த 03.06.2011 ஆம் தேதியில் பூபதி என்பவரிடம் இருந்து அவரது சொத்துக்களை கிரையம் பெற்றதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேலும் 1–ம் பிரதிவாதியானவர் பக்கத்து நிலத்துகாரர் என்ற முறையில் நான் தாவா சொத்தை அனுபவிப்பதை பல வழிகளில் தொந்தரவு செய்தார் என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதனால் நான் 1–ம் பிரதிவாதியின் மீது ஏற்கனவே வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை.

2) நான் திருச்செங்கோடு கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 1–ம் பிரதிவாதியின் மீதும், அவருக்கு கிரைய பெற்ற பூபதி மீதும், பூபதிக்கு கிரைய செய்து கொடுத்த பொன்னாயாள், ரத்தினம் ஆகியோர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி அ.வ.எண். 232/2013 ல் இந்த வழக்கின் 1–ம் அயிட்ட சொத்தை மேற்படி வழக்கின் சொத்து விவரமாக காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் இந்த வழக்கின் 1–ம் அயிட்ட சொத்தை பொருத்து விளம்புகை பரிகாரமும், எனக்கு பாத்தியப்பட்ட சொத்தின் மேபுறப்பகுதியை நிர்ணயம் செய்ய கோரி அந்த வழக்கின் பிரதிவாதிகள் நான் அனுபவிப்பதற்கு இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான்.

3) மேற்படி வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரங்கள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கின் தீர்ப்புரையில் இந்த 1- பிரதிவாதி 03.06.2011 ஆம் தேதியிட்ட கிரைய பத்திரத்தின் படி கிரைய சொத்து பாத்தியப்பட்டது என்று நிரூபணம் செய்துள்ள நிலையிலும் வாதி கோரியுள்ள விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் பெற அருகதையற்றவர் என்று குறிப்பிட்ப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏற்கனவே 1-ம் பிரதிவாதியின் பெயரில் கிரையம் பெறப்பட்ட 1-ம் அயிட்ட சொத்து அவருக்கு பாத்தியப்பட்டது என்று நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதால், அதன் அடிப்படையில் 1-ம் பிரதிவாதி தனது சொத்தை 2-ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்துள்ளார் என்றும் அதனால் 1-ம் பிரதிவாதி செய்து கொடுத்த கிரையம் செல்லத்தக்கது என்றால் சரியல்ல.

4) அதனால் 2-ம் பிரதிவாதி பெயரில் ஏற்ப்பட்ட இல்லா மற்றும் செல்லா நிலையுடையது என்று கோரியுள்ள பரிகாரம் சட்டப்படி நிலைக்கத்ததல் என்றால் சரியல்ல. பூபதி பெயரில் ஏற்பட்ட கிரையம் செல்லாது என்று நாளது தேதி வரை எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதாலும், 1-ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரையமும் செல்லாது என்று நாளது தேதி வரை எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதாலும், 2-ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரையம் செல்லாது என்றும் நான் கோரியுள்ள பரிகாரம் சட்டப்படி செல்லாது என்று சொன்னால் சரியல்ல.

5) பொன்னாயாள், மற்றும் ரத்தினம் ஒரு முத்துகவுண்டரின் மனைவி மற்றும் மகள் என்றால் சரிதான். எனக்கு கிரைய செய்தவரில் ஒருவர் முத்துகவுண்டர் என்றால் சரிதான். முத்துகவுண்டர் காலத்திலேயே அவர்களது சொத்தை பொறுத்து அத்து கண்டு வேலி அமைத்தனர் என்றால் இல்லை, என்னுடைய நிலத்திற்கு நான் வேலி அமைத்தேன். 2-ம் பிரதிவாதியின் நிலத்திற்கு கிழபுறம் அரசங்காடு உள்ளது என்றால் சரிதான். 2-ம் பிரதிவாதியின் நிலத்திற்கு மேபுறத்தில் தென்வடலாக செல்லும் குமாரபாளையம் ரோடு உள்ளது என்றால் சரிதான்.

6) என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தின் மேபுறமாக 2–ம் பிரதிவாதியின் நிலம் உள்ளது என்றால் சரிதான். அந்த புகைப்படம் **பி.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1–ம் பிரதிவாதியிடம் இருந்து 2–ம் பிரதிவாதி வீட்டோடு சேர்த்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வீடு 2–ம் பிரதிவாதியின் வீடு என்றால் சரிதான், அதற்கு பக்கத்தில் என்னுடைய இடம் உள்ளது.அந்த புகைப்படம் **பி.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2–ம் பிரதிவாதியின் வீட்டை சுற்றி அத்து கண்டு கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளது என்றால் அந்த கம்பி வேலி நான் போட்டது ஆகும்.

7) 2–ம் பிரதிவாதி என்னுடைய எந்த சொத்தையும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றும் ஏற்கனவே தாக்கல் செய்ப்பட்ட வழக்கின் சொத்தின் விவரம் தான் இந்த வழக்கில் 1–ம் அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1–ம் பிரதிவாதி வாங்கிய சொத்தின் அடிப்படையில் உட்பிரிவு செய்யப்பட்டு ச.எண். 531/13 பி –ல் 1015 சதுரடிகள், ச.எண். 539/14 பி –ல் 811 சதுரடிகள் மற்றும் ச.எண். 539/15 பி –ல் 21 சதுரடிகள் ஆக மொத்தம் 1850 சதுரடிகள் 1–ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. அதனால் 2–ம் பிரதிவாதி ஏற்கனவே நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் ஆவணங்களை சரிபார்த்து வாங்கப்பட்ட கிரையம் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. அதனால் நான் ஏற்கனவே வழங்கப்பட்ட தீர்ப்பை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் அதன் அடிப்படையிலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்ததல்ல என்று சொன்னால் சரியல்ல.